செய்தி வெளியீடு எண். 40-2017 நாள்: 25.01.2017

# விழுப்புரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை திருமதி.வசுதாமிஸ்ரா,இ.ஆ.ப.,தலைமையிலான மத்திய குழுவினர் பார்வையிட்டனர்.

*****

விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை 2016-ஆம் ஆண்டு பொய்த்ததால் ஏற்பட்ட கடும் வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட மத்தியக்குழு இன்று (25.01.2017) காலை விழுப்புரம் மாவட்டத்தில் பல பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

மத்தியக்குழு தேசிய கூட்டுறவு மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.வசுதா மிஸ்ரா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நிதி ஆணைய ஆலோசகர் திரு.தீனாநாத், மத்திய மின்சார ஆணைய துணை இயக்குநர் திரு.சுமித்குமார் அவர்கள் முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு.சத்திய கோபால்,இ.ஆ.ப., அவர்கள் விக்கிரவாண்டி வட்டம் பனையபுரம் ஊராட்சி பகுதிகளில் பாதிப்படைந்த நெல் மற்றும் கரும்பு பயிர்களை பார்வையிட்டனர்.

திண்டிவனம் வட்டம், மைலம் ஊராட்சி ஒன்றியம் பேரணி ஊராட்சியில் வறட்சியால் பாதிக்கப்பட்டு கருகிய உளுந்து மற்றும் கரும்பு பயிர்களை பார்வையிட்டனர். பிறகு அந்த பகுதிகளை சேர்ந்த விவசாயிகளிடம் சாகுபடி செய்த பயிர்களின் விவரங்கள், செலவுத்தொகை, தற்போது வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறித்து மத்திய குழுவினர் கேட்டறிந்தனர். மேலும் பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்றும், கூட்டுறவு சங்கங்களின் விவசாய கடன்கள் பெற்றுள்ளார்களா என்ற விவரங்களையும் விவசாயிகளிடம் கேட்டறிந்தனர். தொடர்ந்து, திண்டிவனம், பொதுப்பணித்துறை பயணியர் மாளிகையில் விழுப்புரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர் சேதங்கள் தொடர்பாக, வைக்கப்பட்டுள்ள புகைப்படங்களை மத்தியக் குழுவினர் பார்வையிட்டனர்.

மத்தியக்குழுவுடன், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜசேகரன், திண்டிவனம் சார் ஆட்சியர் (பொ) திரு.சுரேஷ்குமார், வேளாண்மை இணை இயக்குநர் திரு.கார்த்திகேயன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி.மணிமொழி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.